செய்தி வெளியீடு எண்: 417 நாள் : 19.08.2015

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆணைப்படி நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் செயல்பாடுகள் குறித்து மாண்புமிகு நகராட்சி நிர்வாகம், ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் திருஎஸ்.பி.வேலுமணிஅவர்கள் ஆய்வு.**

*******

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆணைப்படி, மாண்புமிகு நகராட்சி நிர்வாகம், ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் திரு.எஸ்.பி.வேலுமணி அவர்கள் நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் செயல்பாடுகள் குறித்து தலைமை செயலகத்தில் திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறை கூட்ட அரங்கில், (17.8.2015) அன்று விரிவான ஆய்வு மேற்கொண்டார்.

இந்த ஆய்வுக் கூட்டத்தில் மாண்புமிகு நகராட்சி நிர்வாகம், ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் சென்னை மாநகராட்சி உள்ளிட்ட 12 மாநகராட்சிகள், 124 நகராட்சிகள் மற்றும் 528 பேரூராட்சிகளில் செயல்படுத்தப்பட்டு வரும் குடிநீர் வழங்கல் பணிகள், சாலைப் பணிகள், பாதாள சாக்கடைத் திட்டங்கள், மழைநீர் வடிகால் பணிகள், புதிய தெருவிளக்குகள் அமைத்தல், திடக்கழிவு மேலாண்மை உள்ளிட்ட வளர்ச்சிப் பணிகளின் முன்னேற்றம் குறித்து விரிவான ஆய்வு மேற்கொண்டார்.

சென்னை மாநகராட்சி உள்ளிட்ட அனைத்து மாநகராட்சிகள், நகராட்சிகள் மற்றும் பேரூராட்சி பகுதிகளில் பொதுமக்களுக்கு வழங்கப்படும் குடிநீர் விவரங்களையும் கேட்டறிந்தார். நகர்ப்புற பகுதிகளில், அனைத்து பகுதிகளுக்கும் பொதுமக்களுக்கு தங்குதடையின்றி குடிநீர் வழங்க அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்ள வேண்டும் என அலுவலர்களுக்கு அறிவுரை வழங்கினார். மேலும், நகர்ப்புற பகுதிகளில் டெங்கு காய்ச்சல் போன்ற தொற்று நோய்கள் ஏற்படாமல் தடுக்க

எடுக்கப்பட்டுள்ள முன்னெச்சரிக்கை தடுப்பு நடவடிக்கைகள் குறித்தும் விரிவான ஆய்வு மேற்கொண்டார்.

இந்த ஆய்வுக் கூட்டத்தில் நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அரசு முதன்மை செயலாளர் திரு.க.பணீந்திரரெட்டி இஆப., சென்னை மாநகராட்சி ஆணையர் மற்றும் முதன்மை செயலர் திரு.விக்ரம் கபூர், இஆப., சென்னை பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரிய மேலாண்மை இயக்குநர் டாக்டர்.பி. சந்தரமோகன், இ.ஆ.ப., தமிழ்நாடு நகர்ப்புற நிதி மற்றும் அடிப்படை வசதி மேம்பாட்டு நிறுவன தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் டாக்டர் எஸ்.சுவர்னா, இ.ஆ.ப., தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய மேலாண்மை இயக்குநர் திரு.சி.விஜயராஜ் குமார், இ.ஆ.ப., நகராட்சி நிர்வாக இயக்குநர் திரு. ஜி.பிரகாஷ், இ.ஆ.ப., பேரூராட்சிகளின் இயக்குநர் திரு.ராஜேந்திர ரத்னூ, இ.ஆ.ப., சென்னை மாநகராட்சி துணை ஆணையர் ( பணிகள்) திரு.கந்தசாமி இ.ஆ.ப., துணை ஆணையர் ( சுகாதாரம் ) திரு.கண்ணன் இ.ஆ.ப., சென்னை குடிநீர் வடிகால் வாரிய செயல் இயக்குநர் திரு.சந்தீப் இ.ஆ.ப., நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை துணை செயலாளர் திரு.பிரவீன் பி.நாயர் இ.ஆ.ப., சென்னை நதிகள் சீரமைப்பு அறக்கட்டளை திட்ட இயக்குநர், திரு.கலையரசன், தலைமைப் பொறியாளர்கள், கண்காணிப்பு பொறியாளர்கள், செயற் பொறியாளர்கள் மற்றும் உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**வெளியீடு:**

**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**